# ஈழத்துப் பெண் ஆளுமைகள்

**பேராசிரியர் சுபதினி ரமேஸ்**
மொழியியல் ஆங்கிலத் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
subathini128@yahoo.com

**அறிமுகம்**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இலக்கிய வரலாற்றைப் பார்க்கும்போது, இலங்கையில் சைவம் மற்றும் சமூகத்தைப் பேணுகின்றவர்களில் முக்கியமானவர்களாக பெண்கள் முக்கிய இடத்தினைப் பெறுகின்றனர். இப்பெண்புலவர்கள் ஈழநாட்டின் தமிழ்க் கல்வியிலேற்படுத்திய தாக்கங்கள் இதுவரை எவராலுமே வெளிக்கொண்டுவரப்படவில்லையென்றே குறிப்பிடவேண்டும். இவர்களின் இலக்கண, இலக்கியத் தொண்டுகள், அவர்களால் பாடப்பட்ட பாடல்கள், சமயத்திற்குச் செய்த தொண்டுகள், சமூகத்தோடு சேர்ந்து சமூகத்திற்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள் எனப் பலவகைப்பட்ட ஆளுமைகளைக் கொண்டவர்களாக இப்பெண்கள் விளங்கினார்கள். இப்புதிய கல்விச் சூழல்கள், கல்விப் பாரம்பரியங்களையும், புலமைச் சூழல்களையும் உருவாக்கின. பாரம்பரியக் கல்வி மரபிரனைக் கொண்டிருந்த ஈழத்து இலக்கியப் பாரம்பரியம் ஒருவகையில் திண்ணைப் பள்ளி மரபு என்றும் அழைப்பதுண்டு. இதன் முக்கிய நோக்கம் நல்ல மாணாக்கர்களை உருவாக்கி, தமிழ்மொழி வளர்ச்சிக்காகப் பாடுபட்டுழைத்த பலர் இவர்களுள் காணப்படுகின்றனர். அவ்வகையில் ஈழத்தின் பெண் ஆளுமைகளை இவ்வுலகிற்கு எடுத்துக் காட்டவேண்டியது காலத்தின் தேவையாகும்.

இலங்கையில் ஐரோப்பியர்களான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் போன்றவர்களின் வருகையின் பின் பல்வேறுப்பட்ட மாற்றங்கள் ஏற்பட்டன. அந்தவகையில் இவர்களின் வருகையினால் வட இலங்கைப் பெண்களின் வாழ்வியலிலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. மறுபுறத்தில் ஐரோப்பியர் வரும்வரை இலங்கையிலே மரபுவழிக்கல்வி முறையே நிலவி வந்தது இக்கல்விப் பாரம்பரியம் ஈழநாட்டின் புலமைவளத்தை வளர்த்து வந்ததில் பெரும்பங்காற்றியுள்ளது. இந் நூற்றாண்டிலே தமிழ் மொழி வளர்ச்சிக்காகப் பாடுபட்டுழைத்த பலர் பாரம்பரிய கல்விமரபு, நிறுவனரீதியான கல்விமரபு என்ற இருவகை மரபுகளோடு தொடர்புடையவர்களாகவே காணப்படுகின்றனர். இக்கால கட்டத்தில் வாழ்ந்த பல பெண் தமிழறிஞர்கள் இக்கல்விச் செழுமையின் ஆதிக்கத்தால் இலக்கியம், உரைகள், செய்யுளாக்கம், கண்டனம், புராணபடனம்,

பாடபேத ஆராய்வு முதலிய பன்முகப்பட்ட ஆளுமைகளையும், ஆற்றலையும் கொண்டவர்களாக விளங்கினார்.

கிழக்கிலங்கை இலக்கிய வரலாற்றுத் தொடர்ச்சியில் சமகால இலக்கியப்போக்கு தனித்துவமான இடத்தினை வகிக்கின்றது. அதில் கவிதைப் படைப்பிற்கான வடிவமும், நீட்சியும் ஒவ்வொரு காலகட்டத்திலும் வளர்ச்சி நோக்கி பயணித்திருப்பது அவதானிக்கத்தக்கதாகும். அவ்வாய்வானது கிழக்கின் சமகாலப் பெண்கவிதைச் செயற்பாடுகள் தொடர்பில் தனித்துவமான அடையாளத்தைக் கொண்டவையாக வெளிப்படுத்துமாற்றை இவர்களின் எழுத்துச் செயற்பாடுகளினூடாக அறியலாம். அத்தோடு குறியீடு, பின்னணி, அணுகுமுறை, பேசுபொருள், மொழியமைப்பு, வரையறை, அடையாளம் என்பவற்றுடனான தொடர்ச்சியான பின்பற்றல் மற்றும் விலகிப் பயணித்தல் அல்லது எதிர்வினையாற்றல்களின் அவசியத்தையும் இவர்களிடம் காணலாம்.

## பெண் புலவர்கள்

ஈழநாட்டில் புகழ் பெற்று விளங்கிய தமிழ் பெண் புலவர்களில் பெரும்பாலானவர்களின் வாழ்க்கையையும், கல்வியையும், பணியையும் ஆராய வேண்டுமானால் அவர்களின் குடும்ப, கல்விமரபுகளையும், சமூக அந்தஸ்துகளையும் விளங்கிக்கொள்வது அவசியமாகும் இந்த வகையில் தமிழ்ச்சுடர்மணிகள் வரிசையில் கிட்டத்தட்ட 20க்கும் மேற்பட்ட பெண்கள், மலையகப் பெண்கள் 'தமிழ் மகள்' மங்களம்மா மாசிலாமணி, பொன்மணிகுலசிங்கம், ஜெஸீமாஇஸ்மாயில், சிதம்பரத்தம்மாள் தெய்வநாயகம்பிள்ளை என ஆரம்பகால பெண் ஆளுமைகளுடன் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பல பெண்கள் குறிப்பாக வசந்தா வைத்தியநாதன் மீனா கணேசலிங்கம், மாலா சபாரட்ணம், சத்தியபாமா ராஜலிங்கம், கலைவாணி உக்கிரப் பெருவழுதிப்பிள்ளை, அருந்ததி ஸ்ரீரங்கநாதன், வாசுகி ஜெகதீஸ்வரன், மல்லிகா யோசப், இராஜமனோகரி புலேந்திரன், பத்தினியம்மா திலகநாயகம் போல், லலிதா நடராஜா, அன்னலட்சுமி, இராஜதுரை, விஜயகௌரி பழனியப்பன், சாந்தி சச்சிதானந்தன், செல்வி திருச்சந்திரன் எனப் பலர் காணப்படுகின்றனர். இந்த நிலையில் சமூகத்தில் சமயத்தின் மூலமாக சமத்துவத்தினை ஏற்படுத்த சிவத்தமிழ்ச்செல்வி, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும், ஏழாலையில் வசந்த நாகபுசணி அம்மன் ஆலய நிர்வாகத்தைச் செவ்வனே நடத்திவரும் சின்னம்மன் அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். சமஸ்கிருத இலக்கியங்களுக்கு பங்களிப்பு செய்த பெண்கள் எனப் பலவகையானவர்களினிடையே கல்வியும், ஆளுமையும் குடும்பநிலைப்பட்ட தொடர்புகளும், சமூக நிலைப்பாடுகளும் காணப்படுகின்றன.

## ஆய்வின் அவசியம்

ஈழத்துத் தமிழ் பெண்மணிகள் பல்வேறு வகையிலும் தமிழியல் ஆய்வுகளுக்குச் சிறப்பான பங்களிப்புக்களைச் செய்துள்ளனர். இவர்கள் பற்றிய நூல்கள் அவ்வப்போது வந்திருந்தாலும் இது பற்றிய ஒரு முழுமையான ஆய்வு முயற்சி இதுவரை மேற்கொள்ளப்படவில்லையென்றே குறிப்பிடலாம். இத்தகைய ஆய்வுகளைச் செய்யவேண்டும், பெண் ஆளுமைகள் பற்றிய விபரங்களை வெளிப்படுத்தவேண்டும் என பல அறிஞர்கள், பேராசிரியர்கள் வலியுறுத்தியிருந்தாலும் அதற்கான சந்தர்ப்பமோ, முயற்சிகளோ இடம் பெறவில்லை என்றே குறிப்பிட வேண்டும். அந்தவகையில் இங்கு தரப்பட்டுள்ள இச்சிறிய ஆய்வுக்கட்டுரையானது யானைப் பசிக்குச் சோளப்பொரி போன்ற ஒரு சிறிய முயற்சியாகும். இம்முயற்சி இப்படியே

அடங்கிவிடக்கூடாது, மேலும் மேலும் வளரவேண்டும் அதற்கு பூரண ஆதரவையும் முயற்சியையும் நல்க பலஆய்வாளர்கள் முன்வரவேண்டும் இது நீண்ட பரப்பில் மேற்கொள்ளப்பட்டு வெளிக்கொண்டு வரப்படவேண்டும்.

ஆரம்பகாலங்களில் ஆண்களின் அறிவையும், ஆற்றலையும் மட்டுமே கருத்தில் கொண்டிருந்த சமுதாயம் இப்போது பெண்களையும் ஏற்றுக் கொள்ளும் மனநிலைக்கு மாறியுள்ளது. 19ம் நூற்றாண்டில் ஆரம்பத்தில் சிறு தொகைத் தமிழ்ப்பெண்களே பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டுள்ள போதிலும் அவர்கள் தம் துறைசார்ந்து சாதனைகளை ஏற்படுத்திவந்தனர். பட்டங்கள் ஆள்வதிலும் சட்டங்கள் செய்வதிலும் இன்று பெண்கள் பிரகாசித்துவருகின்றனர். வாய்ப்புகள் வழங்கப்பட்டால் எத்துறையிலும் அவர்கள் முன்னேற முடியும் என்பதை யாரும் மறுக்கமுடியாது (பத்மாசோமகாந்தன் 2003) இலைமறைகாயாக மறைந்திருக்கும் இவர்களது திறமைகளை அறிந்து கொள்ளவும், பதிவு செய்யவும், சமூகத்தில் அவர்களின் பங்களிப்புக்களையும் கடந்த காலங்களில் மண்ணோடு மண்ணாக மறைந்து போனவற்றையும் இன்று வாழ்ந்துகொண்டிருக்கும் பெண்களின் ஆற்றல்களையும் சாதனைகளையும் முடிந்தளவுக்கு இக்கட்டுரையின் வெளிக்கொண்டுவர முயற்சித்துள்ளேன்.

## பெண்களின் பங்களிப்புக்கள்

பெரும்பாலான பெண் அறிஞர்கள் தமது குடும்பச் சூழல், கல்வி, ஆளுமை, குடும்பநிலைப்பட்ட தொடர்புகள், சமூகநிலைப்பாடுகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டே தமது பங்களிப்புகளை நல்கியுள்ளனர். இவ்வகையில் சைவப் பெரியார்களாகவும் சிறந்த சொற்பொழிவாளர்களாகவும் சைவப்பணி, சமூகப்பணி, தமிழ்பணிகளைச் செய்த பன்முக ஆற்றல் மிக்கவர்களாகவும் விளங்கினார்கள்.

கடந்த காலங்களில் வாழ்ந்த பல பண்டிதைகளில் குறிப்பிடத்தக்கவர்களாகப் பட்டியலிடப்பட்டவர்கள் என பின்வருவோரைக் குறிப்பிடலாம் பண்டிதை பார்ப்பதி, பண்டிதை பத்மாசனி அம்பாள், பண்டிதை பரமேஸ்வரி, பண்டிதை அமிர்தாம்பிகை, பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், பண்டிதை மகேஸ்வரி, பண்டிதை பொன்பாக்கியம் என இங்கு தரப்பட்டவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவே.

இப்பெண்களில் பலர் கல்வியில் சிறப்புடையவர்களாக அப்போது காணப்பட்டனர். இலங்கையில் பட்டம் பெற்றவர்களாக மட்டுமின்றி, இந்தியாவில் பட்டம் பெற்ற (சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மதுரைப் பல்கலைக்கழகம்) மாதர்களையும் பத்தொன்பதாம் நூற்றாண்டு காலங்களில் காணக்கூடியதாக இருக்கின்றன. அப்போது வாழ்ந்த இருவர் பற்றிய செய்திகள் குறிப்பாக 'தமிழ்மகள்' மங்களம்மாள் மாசிலாமணி, (1884 - 1971) மலையக விடிவெள்ளி கோ.ந.மீனாட்சியம்மாள் (1894 - 1943) மிகவும் சிலாகிக்கத்தக்கவர்கள் (இலங்கைத் தமிழ்ச்சுடர்மணிகள் வரிசை - 23, 2017 மலையக விடிவெள்ளி கோ.ந.மீனாட்சியம்மாள் 2015). இலங்கை தமிழ்ச்சுடர்மணிகள் என்ற நூல்வரிசை நீண்டகாலமாக வெளியிடப்பட்டுவருகின்றன.

அவற்றுள் எல்லா புத்தகங்களையும் என்னால் ஆய்வுக்கு எடுக்கமுடியவில்லை கிடைத்தவற்றை மட்டுமே பயன்படுத்தியுள்ளேன். எனவே என்னால் சேகரிக்கப்பட்ட குறிப்பிட்டதரவுகளை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் பெண்களின் சாதனைகளை வகைப்படுத்தியுள்ளேன்.

## சீமாட்டி லீலாவதி இராமநாதன்

கல்வியறிவின் பெருக்கத்திற்கும் சைவசமய வளர்ச்சிக்கும் லீலாவதி இராமநாதன் அவர்கள் ஆற்றிய தொண்டானது என்றுமே போற்றக்கூடிய மேன்மை வாய்ந்ததாகும்.

இப்பெண்மணியின் ஆற்றலும், ஆளுமையும் அவர்களின் புலமை முயற்சிகளுக்கும், சமய சமூக ஈடுபாடுகளுக்கும் நமது சான்றோர் வழங்கிய இடமே காரணமாகும். கல்வி அறிவை பெண்களிடையே பெருக்க, அவர்களின் முக்கியத்துவத்தை சமூகத்திலே நிலைநாட்ட பெண்களுக்கென ஒரு கல்லூரியையும் நிறுவினார். சேர்.பொன்.இராமநாதன் அவர்களின் மனைவியாக இருந்து, ஆங்கில பெண்மணியாக பிறமதம் சார்ந்திருந்த செல்வி கரின், தானாகவே விரும்பி இந்துசமயத்தையும் தமிழ்க் கலாசாரத்தையும் தழுவியதுடன் சைவச் சமூகத்திற்கு பெருந்தொண்டாற்றியுள்ளமை பெரிதும் போற்றக்கூடியதாகும்.

**சிவத்தமிழ்ச் செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி**

இறையடியே தஞ்சம் என்ற பரிபூரண நம்பிக்கையோடு இவ்வுலகில் தோன்றிய தங்கம்மா அவர்கள் பேச்சிலும் மூச்சிலும் சைவமும் தமிழும் தவழ தனது வாழ்க்கையை சைவச் சமூகத்துக்கே அர்ப்பணித்த செந்தமிழ்ச் செல்வி ஆவார். இராமநாதன் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியராக இருந்த அவர் பண்டிதர், பாலபண்டிதர் என்ற தகைமைகளையும் கொண்டிருந்தனர். இலங்கையின் பல இடங்களில் ஆசிரியராக இருந்த காலத்திலே சமய இலக்கியச் சொற்பொழிவுப்பணிகளும், சைவப்போதனைகளும், திருமுறை வகுப்புக்களும் இவரால் நடாத்தப்பட்டன. இவை மட்டுமல்லாமல் மிகச் சிறந்த ஒரு சொற்பொழிவாளராகவும் தனது கணீரென்ற குரலில் நிகழ்த்தி ஆலயங்கள் தோன்றும் சமயச் சொற்பொழிவுகளை விடாமல் தொடர்ந்து நிகழ்த்தி இலக்கியப் பேச்சாளராகவும் விளங்கினார். சைவ விழிப்புணர்வை ஏற்படுத்தி திருமுறைகள் புராணங்கள் சைவசித்தாந்த விளக்கங்கள், கோயிற்கிரிகைகள் விழாச் சிறப்புக்கள் பற்றிய சொற்பொழிவுகளை இலங்கை பூராகவும் நிகழ்த்தினர். 19ம் நூற்றாண்டில் சைவத்தையும், தமிழையும் மறுமலர்ச்சியுறச் செய்த ஆறுமுகநாவலரின் பெயர் தமிழகமெங்கும் கௌரவம் பெற்றது போல் தங்கம்மா அப்பாக்குட்டியின் பேச்சாற்றலும் சைவ சித்தாந்தபுலமையும் தமிழகத்தாரால் போற்றப்பட்டது. அவர்கள் கொடுத்த கௌரவம் அப்பாக்குட்டி அவர்களுக்கு மேலும் மேலும் பாராட்டைத் தந்தது. தமிழகத்தில் சொற்பொழிவாற்ற 1965ல் இந்தியா சென்ற இவர்கள், அன்று முதல் 1982வரை அங்கேயுள்ள பல இடங்களிலும், ஆலயங்களிலும் மக்கள் கூடும் பல பெரிய மாநாடுகளிலும் தனியாகவும் தொடர் சொற்பொழிவுகளாகவும் நடாத்திக்காட்டினார். அதுமட்டுமன்றி பல அமைப்புக்களால் பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அவற்றுள் சிலவற்றைக் குறிப்பிடுவது இங்கு சாலச்சிறந்ததாகும். சைவதரிசினி (1972), திருவாசகத்தொண்டர்(1972), துர்க்காதுரந்தரி (1974), சிவமயச்செல்வி (1974), திருமுறை அரசி (1983), சிவஞானவித்தகர் (1974) போன்ற பல இன்னோரன்ன பட்டங்கள் பெற்றதன் மூலம் அவரின் அறிவுப்புலமையும் இணையில்லாச் செயலாற்றலின் சிறப்பையும் இங்கு காணலாம்.

இவர் எழுதியுள்ள நூல்கள் குறைவு கோயிற்கிரியைகள் நோன்பு, நவராத்திரி, கந்தபுராணச் சொற்பொழிவு, மலேசியச் சொற்பொழிவுகள் எனச் சிலவே நூல்களாக வெளிவந்தன. அதுமட்டுமல்லாமல் ஆலயநிர்மாணத்திலும் நிர்வாகத்திலும் முதன்மையானவராக விளங்கியதோடு மட்டுமல்லாமல் பழமையும், அருளுங்கொண்டதாக முற்காலத்தில் விளங்கிய தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோவிலை மீளமைப்புச் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு குறுகிய காலத்தில் இதனைச் சாத்தியமாக்கினார். ஆலயங்கள் ஓர் சமுதாயமையங்கள் என்பதைச் செயலில் ஏற்படுத்தியவர் தங்கம்மா அப்பாக்குட்டி என்னும் பெண் அறிஞரே (பத்மா, சோ :2003). இவ்விடத்தில் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் பத்மா அவர்களின் நூலுக்கு எழுதிய முன் வாசகக் குறிப்பில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "யாழ்ப்பாணத்தின் இந்துமத பண்பாட்டில் அண்மைக்காலத்தில் இரு முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன ஒன்று இந்துக்களால் வழிபடப்பெறும் ஒரு பெண்

தெய்வத்தின் வழிபாடு பற்றியது மற்றது யாழ்ப்பாணப்பிரதேசத்தின் கோயில் முகாமை பற்றியது......... செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி என்ற ஒரு தமிழ் ஆசிரியையின் ஆன்ம யாத்திரையின் ஊடாக, அவரது புலமை முதிர்ச்சியின் வழியாக, அவரை வழிநடத்தும் சமூக மத தரிசனத்தின் ஊடாக இந்த இரு மாற்றங்களும் நிறைவேறியுள்ளன" அறிவும் ஆற்றலும் உழைப்பும் உயர்ந்த சிந்தனைகளும் இருந்தால் பெண்ணினத்தாலும் பெரும் சாதனைகளை சாதிக்க முடியும் என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

**பண்டிதை என்பதற்குள் அடங்குபவர்கள்**

பல பண்டிதைகளின் பெயர்கள் எம்மால் அறியப்பட்டிருந்தாலும், அவர்களுடைய பூரணமான தகவல்களை எம்மால் அறிந்து கொள்ள முடியவில்லை. இவர்கள் பற்றிய சிறுசிறு விடயங்களே ஆங்காங்கே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய பெண் பண்டிதர் பற்றிய ஆய்வுகள் முழுமையாக செய்யப்பட வேண்டுமானால் சமூகத்தில் வாழ்ந்த ஏனைய அறிஞர்கள் அக்காலத்தில் வாழ்ந்த பெரியோர்கள், அறிஞர்கள், கல்வியாளர்கள் யாவருடைய ஒத்துழைப்பும் வேண்டும். அவர்கள் பற்றி வெளியிடப்பட்ட துண்டுபிரசுரங்கள் அனைத்தையும் சேகரித்து நூல்களாக வெளியிட வேண்டும். இவ்விடயம் தொடர்பாக பேராசிரியர் சிவலிங்கராஜா அவர்களை அணுகிய போது பல விடயங்களை அவரிடம் இருந்து பெறக்கூடியதாக இருந்தது. அவையாவும் எழுத்து வடிவில் கொண்டுவரப்பட வேண்டும். அவர்கள் கூறியவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் இக்கட்டுரைக்குள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன.

1. புலோலி பருத்தித்துறையை சேர்ந்த பண்டிதை பார்பதி - இவர் உடுப்பிட்டி சிவசம்புப்புலவரின் மாணவி.

2. புலோலி பருத்தித்துறையை சேர்ந்த பண்டிதை திருமதி பத்மாசனி அம்பாள்.

   மேற்கூறிய இருவரும் சைவப் பெரியார்களாக அவ்வூரில் போற்றப்பட்டார்கள்.அவர்கள் பற்றிய மேலதிக விபரங்கள் கிடைக்கவில்லை என்னால் அந்தளவுக்கு ஒரு நீண்ட ஆய்வு செய்வதற்கு நேரமும் காலமும் போதாமையும் இதற்கு ஒரு காரணமாகும்.

3. சோ.இளமுருகனாரின் மனைவியாக இருந்த பண்டிதை பரமேஸ்வரி அவர்கள் ஈழகேசரி முதலான பத்திரிகைகளுக்கு பல கட்டுரைகள் எழுதியவர், ஈழத்து சிதம்பர புராணத்திற்கு உரை எழுதியவர் இவரின் இம் முயற்சி அவரின் கல்வி சார் ஆற்றலை வெளிப்படுத்துகின்றது.

4. நெடுந்தீவை பிறப்பிடமாகக் கொண்ட பண்டிதை சத்தியதேவி அவர்கள் நீர்வேலி பண்டிதர் துரைசிங்கத்தின் மனைவியாவார். இவர் கட்டுரைகள் பல எழுதியது மட்டுமல்லாமல் சிறந்த சொற்பொழிவாளராகவும் காணப்பட்டார்.

இவர்கள் எம்முடைய நினைவிற்கு எட்டியவர்கள். இவர்களைத் தவிர பலபேர் இன்னும் உள்ளார்கள். பண்டிதை மகேஸ்வரி, பண்டிதை அமிர்தாம்பிகை, பண்டிதை பொன் பாக்கியம் போன்றோரை பெயரளவில் அறிந்திருந்தாலும் அவர்கள் பற்றிய தகவல்களை அறியமுடியவில்லை.

இவர்களைவிட அரசியலில் ஆர்வம் கொண்டவராக செல்லம்மா என்பவரைக் குறிப்பிடலாம். இவர் நெடுந்தீவு கிராமச்சங்க தலைவராக இருந்து சேவையாற்றியவர். அப்பிரதேச விதானையாரின் மனைவியாக இருந்தவர். இலங்கையில் முதன்முதலில் கிராம சங்கத் தலைவராக இருந்தவர் எனப் பேராசிரியர் சிவலிங்கராஜா அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். மாறாக மட்டக்களப்பு, மலையகம் போன்ற இடங்களிலும்

பெண் புலமையாளர்கள் பலர் இருந்தமைக்கான ஆதாரங்கள் உண்டு. மட்டக்களப்பைச் சேர்ந்த கமலபூசணி திருநாவுக்கரசு, கோகிலம் சுப்பையா போன்ற ஒரு சிலரின் பெயர்கள் அறியப்பட்டிருந்காலும் பூரணமான தகவல் கிடைக்கப் பெறவில்லை. மலைநாட்டுப் பெண்புலமையாளர்கள் பற்றி கலாநிதி. யோகராசா எழுதிய நூல் ஒன்று மட்டுமே ஆதாரமாக இருக்கின்றது.

5. மலையக விடிவெள்ளி என அழைக்கப்படும் திருமதி. மீனாட்சியம்மா நடேசையர் என்ற பெண் புலமையாளர் தனது கணவனுக்குத் துணையாகச் செய்த பணிகளுள் அரசியல் பணிகள், தொழிற்சங்கப் பணிகள், பத்திரிகை முயற்சிகள், நூல் வெளியீட்டு பிரயத்தனங்கள், அச்சகம் நிறுவும் முயற்சிகள் யாவும் அவரின் சிறப்பைப் பறைசாற்றுகின்றன. இவருடைய பணிகளின் சிறப்பால் இவரை யாவரும் போற்றினர். யாழ்ப்பாணத்தில் மங்களம்மா, திருகோணமலையில் தையல்நாயகி, கொழும்பில் மீனாட்சியம்மாள் என்று குறிப்பிடுமளவிற்கு அவர்களின் பத்திரிகைப் பணி போற்றப்பட்டது. பெண்கள் வெளி உலக நடவடிக்கைகளில் அதிகமாக ஈடுபடாத காலப்பகுதியில் மீனாட்சியம்மை இத்துறைக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது பெண்களின் திறமையில் கொண்டிருந்த நிலைப்பாடாகும் (சாரல் நாடன் 2015). பத்திரிகை ஆசிரியராகவும், கவிதையாளராகவும் அரசியலில் ஒரு பேரிடியாகவும் இருந்த இத்தகைய பெண்களை வரலாறு மறந்துவிடக்கூடாது. இந்தியாவில் இருந்து இலங்கை வந்த தோட்ட தொழிலாளர்களுக்கும் பெண்களுக்கும் அவர் செய்த பங்களிப்புக்கள் சொல்லும் தரமன்று.

6. ‘தமிழ் மகள்’ மங்களம்மாள் மாசிலாமணி யாழ்ப்பாண சமூகத்தில் எவ்வாறு பெண்கள் சமூக முன்னேற்றம், சமூக சீர்திருத்தம், தொழிலாளர் நலன், அரசியல், ஜனாநயக உரிமைகள் என பல்வேறு துறைகளில் முன்னின்றுழைத்த புதுமைப்பெண்களில் ஒருவராக போற்றப்பட்டவர். இலங்கையில் மாத்திரமல்ல இந்தியாவிற்கும் சென்று பெண்கள் முன்னேற்றத்திற்காகவும், சமூக சீர்திருத்தற்காகவும் தமது ஆற்றலை பயன்படுத்தியவர் என்பதை பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் மங்களம்மாள் பற்றி பின்வருமாறு மதிப்பிடுகின்றார்.

‘தமிழ் மகள்’ என்ற சஞ்சிகையை நடத்திவந்த திருமதி மங்களம்மாளின் வரலாறு யாழ்ப்பாண சமூகத்தில் பெண்கள் எத்தகைய சமூக ஈடுபாட்டுடன் வாழமுடியும், வாழ்ந்திருக்கின்றனர் என்பதற்கான ஒரு செயல் விளக்க வரலாறாகும். இவர் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 20ம் நூற்றாண்டு முழுவதும் உட்பட்ட காலப்பகுதியில் ஒட்டுமொத்தமாக இலங்கை வரலாற்றில் இடம்பெறும் முக்கிய சமூக பெண் சிந்தனையாளரிடையே இடம் பெறவேண்டிய பெண்மணி (சிவத்தம்பி 2006)

இவர் பற்றிய விபரங்களை சேகரிக்கும்போது (வள்ளிநாயகி. 2017) இலங்கை தமிழ் சுடர்மணிகள் என்ற சிறிய நூலில் குறமகள் எழுதிய சிறிய கட்டுரை இவ் ஆக்கத்திற்குப் பயன்பட்டது. பெண்களின் கல்வி முன்னேற்றத்திற்கும் அறிவு வளர்ச்சிகும் முற்போக்கான சிந்தனைகளுக்கும் அவரது குடும்பப் பின்னணியே காரணம் எனலாம். 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் பெண்களை பற்றிய பழமைவாதக் கருத்துகள் நிலவியபோதும் அதனை உடைத்தெறிந்து யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் “பெண்கள் சேவா சங்கம்” என்ற நிலையத்தை நிறுவி சமூக விழிப்புணர்ச்சியைத் தூண்டியதோடு பெண்கள் கீழைத்தேய கலாசாரத்தை கைவிடாது நல்ல மனைவியர்களாக திகழவேண்டும் எனவும் வற்புறுத்தினார்.

இலங்கையிலும் இந்தியாவிலும் பல சொற்பொழிவுகளை பெண்கள் சமூகம், முன்னேற்றம் போன்ற பலவகை கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு உரையாற்றினார்.

பெண்கள் அமைப்புகள் மாதர் சங்கங்கள் போன்ற பலவற்றிலும் மகாநாடுகளிலும் பெண்கள் உரிமைகளை வலியுறுத்தினார். அதுமட்டுமல்ல அரசியல் வீராங்கனையாக, சமூகசேவையாளராக, பத்திரிகையாளராக (தமிழ் மகள் பத்திரிகை ஆசிரியை) என அவர் ஏற்ற பதவிகள் பலப்பல. பெண்களின் உரிமைக்குரலை எழுப்பியவராக, அரசியல் உணர்வுமிக்கவராக, கிராமிய மட்டத்தின் முன்னேற்றம் கருதியவராக, சமூகசேவையாராக எளிமையான வாழ்விற்கு வழிகாட்டியவராக மங்களம்மாள் மாசிலாமணி அவர்கள் தனி ஒருவராக ஆற்றிய சேவைகளை உணரும்போது நாம் அவரை போற்றாது இருக்க முடியாது. (வள்ளிநாயகி 2017)

இதுவரை நாம் பார்த்த பெண்புலமையாளர்கள் இந்து மதத்தை சார்ந்தவர்கள், தங்கள் ஆற்றலாலும் ஆளுமையாலும் பல இலக்கிய சமய சமூக ஆர்வலர்களாக திகழ்ந்தவர்கள். இவர்களுடன் இஸ்லாம் மத சகோதரியாக காணப்படும் திருமதி. ஜெஸிமா இஸ்மாயில் அவர்கள் கலங்கரை விளக்காக அச்சமூகத்தினரால் போற்றப்படுகின்றார். இலங்கையின் கிழக்கு மாகாணமான மட்டக்களப்பை சேர்ந்த சாந்தமருது எனும் கிராமத்தில் வாழ்ந்தவர். சிறந்த கல்வி வளமும் உயர்ந்த கொள்கைப்பிடிப்பும் கோட்பாடுகளும் கொண்ட ஜெசிமா அவர்கள் சிறுவயதில் இருந்தே இலக்கியங்களில் ஈடுபாடு கொண்டிருந்தவர். இவர்கள் பாடசாலை அதிபராக, ஆசிரியாராக இருந்தபோதிலும் பெண்களின் பாதுகாப்பிலும் அவர்கள் துஸ்பிரயோகத்திற்கு உட்படாமல் இருப்பதிலும் அவர்களின் உரிமைகள் மேம்பாடுகளில் அதிக அக்கறை காட்டி அயராது உழைத்து வந்தவர்.

ஊடகத்துறையில் ஆர்வம் கொண்ட ஜெசிமா இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் இயக்குனர் சபையில் அங்கம் வகித்தவர் மட்டுமல்லாமல் மேடை, வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றுக்கென சிறுவர் துஸ்பிரயோகம், சமாதானம், மனித உரிமைகள், சமயம் பற்றிய பிரதிகளை எழுதிக்கொடுத்ததுடன் பலவற்றை வெளியீடாகவும் வெளிப்படுத்தியுள்ளார். பெண்கள் அரசியல், சமூக, பொருளாதார அரங்கில் பங்குபற்றி தமது ஆற்றல்களை வெளிப்படுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் முன்னின்றுழைத்த இஸ்லாமிய பெண்கல்வியாளர் என அவரை பாராட்டுவது அவரின் சேவைக்குரிய கௌரவமாகும்.

**முடிவுரை**

இத்தகைய பல விடயங்களுடன் திருமதி. பத்மா சேமகாந்தன் அவர்களின் பங்களிப்பும் இவ்விடத்தில் போற்றத்தக்கதாகும். கொழும்பு மாநகரில் வாழ்ந்துவரும் இவர்கள், பெண்களுக்கான ஒரு அங்கிகாரத்தை உருவாக்க பெண்களே முன்னின்றுழைக்க வேண்டும் என ஆணித்தனமாக கூறிவருகின்றார். பெண்களை அடையாளப்படுத்த ஆண்களைத் தங்கியிருக்க வேண்டிய அவசியம் தேவையில்லை. நம்மை நாமே அடையாளப்படுத்திக் கொள்ளவேண்டுமானால் சமூகத்தில் பேராசிரியராக, விரிவுரையாளர்களாக, அதிபர்களாக, ஆசிரியர்களாக, சமூகத்தலைவிகளாக, சமயத்லைவிகளாக அரசியல் தலைவிகளாக, பெரும் நீதி அரசர்களாக, இசை விற்பன்னர்களாக, நாட்டியப் பேரொளிகளாக, குடும்பத்தலைவிகளாக நின்று எமது புலமையையும் ஆற்றலையும் வெளிப்படுத்தினாலே உலகம் சாதனைப் பெண்மணிகளாக எம்மை ஏற்றுக்கொள்ளும்.

**உசாத்துணை நூல்கள்**

1. பத்மா. சோ, (2003) ஈழத்து மாண்புறு மகளீர், குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.

2. வள்ளிநாயகி. (2017) 'தமிழ் மகள்' மங்களம்மாள் மாசிலாமணி,

இலங்கைத் தமிழ்ச்சுடர் மணிகள் வரிசை-23, பதிப்பாசிரியர் க.குமரன்,
குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.

3. சாரல் நாடன், (2015), மலையக விடிவெள்ளி கோ.நா.மீனாட்சியம்மாள்,
குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.

4. மனோன்மணி. ச, (2006), காலத்தை வென்ற பெண், அறிவுப்பதிப்பகம். சென்னை.

5. சுபதினி. ர, (2017) ஈழத்தில் சைவமும் தமிழும் என்னும் கருத்துநிலை உருவாக்கம்,
சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை - 2017.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

6. கணபதிப்பிள்ளை. மு, (1956) ஈழநாட்டின் தமிழ்ச்சுடர்மணிகள்
பாரி நிலையம் - சென்னை.

7. செந்தில்நாதன், கனக, (1956) ஈழத்து மணிவிளக்குகள், ஈழகேசரி வெள்ளிவிழா
மலர் யாழ்ப்பாணம்.

8. சிவலிங்கராஜா. சி, (2009) ஈழத்துத்தமிழ் இலக்கிய செல்நெறி,
குமரன் புத்தக இல்லம், கொழும்பு சென்னை.

9. இலங்கை மலையகத்தமிழ் இலக்கிய முயற்சிகள் 2014 -214.

10. கணபதிப்பிள்ளை. க, (1962), ஈழத்து வாழ்வும் வளமும், பாரதி புத்தகசாலை,
பாரி நிலையம், சென்னை.